## 6th Social Science Lesson 22 Questions in Tamil

## 22. மக்களாட்சி

1. கூற்று 1: மக்களால் மக்களுக்காக மக்களே நடத்தும் ஆட்சி மக்களாட்சி என்று கூறியவர் ஆப்ரகாம் லிங்கன்.

   கூற்று 2: மக்களாட்சியின் பிறப்பிடம் சுவிட்சர்லாந்து.

   **A) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு**

   B) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

   C) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

   D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி

   **(குறிப்பு: மக்களாட்சியின் பிறப்பிடம் கிரேக்கம் ஆகும். ஒரு நாட்டின் குடிமக்கள் தேர்தல் வழியில் தங்களது பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கவும், அதன் மூலம் அரசு அதிகாரத்தில் நேரடியாகப் பங்கேற்பதையும் மக்களாட்சி என்கிறோம்.)**

2. தவறான கூற்றைத் தேர்ந்தெடு.

   A) மக்களாட்சி அமைப்பில் குறிப்பிடத்தகுந்த அளவு அதிகாரம் மக்களிடம் இருக்கும்.

   B) நேரடி மக்களாட்சி முறையில் மக்களே சட்டம் இயற்றும் அதிகாரம் பெற்றிருப்பார்கள்.

   **C) மக்களாட்சி அமைப்புகளில் முடிவெடுக்கும் அதிகாரம் தலைவரிடம் குவிந்திருக்கும்.**

   D) நேரடி மக்களாட்சியில் அனைத்து சட்டத் திருத்தங்களையும் மக்கள்தான் அங்கீகரிப்பர், அரசியல்வாதிகள் நாடாளுமன்ற செயல்முறைகளின்படி ஆட்சி செய்வர்.

   **(குறிப்பு: மக்களாட்சி அமைப்புகளில் முடிவெடுக்கும் அதிகாரம் தலைவரிடம் குவிந்திருக்காது. மாறாக அவ்வதிகாரம் ஒரு குழுவிடம்தான் இருக்கும்.)**


3. பிரதிநிதித்துவ மக்களாட்சி நடைபெறும் நாடுகளில் எது தவறானது?

   A) இந்தியா

   B) இங்கிலாந்து

   C) அமெரிக்க ஐக்கிய நாடுகள்

   **D) சுவிட்சர்லாந்து**





**4.** அதிபர் மக்களாட்சி நடைபெறும் நாடுகள் எவை?

1. அமெரிக்க ஐக்கிய நாடுகள் 2. இங்கிலாந்து

3. கனடா 4. இந்தியா

A) 1, 2 B) 2, 3 **C) 1, 3** D) 1, 4




**5.** எந்த ஆண்டு ஐ.நா.சபை உலக மக்களாட்சி தினமாக செப்டம்பர் 15ஆம் நாளை அறிவித்தது?

A) 2004 B) 2005 C) 2006 **D) 2007**

**6.** நமது அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கிய முதன்மை வடிவமைப்பாளராகக் கருதப்படுபவர் யார்?

A) M.N. ராய்

B) இராஜேந்திர பிரசாத்

**C) அம்பேத்கர்**

D) ஜவஹர்லால் நேரு

**(குறிப்பு: இந்திய அரசமைப்புச் சட்டம்தான் உலகில் எழுதப்பட்ட அரசமைப்புச் சட்டங்களிலேயே மிகப்பெரியது. இதை டாக்டர் பி.ஆர்.அம்பேத்கரின் தலைமையிலான அரசமைப்புச் சட்டவரைவுக் குழு உருவாக்கியது.)**

7. உலகிலேயே முதன் முதலில் பெண்களுக்கு ஓட்டுரிமை அளித்த நாடு __________ ஆகும்.

A) சுவிட்சர்லாந்து

B) இந்தியா

C) ஐஸ்லாந்து

**D) நியூஸிலாந்து**

**(குறிப்பு: உலகளாவிய வயதுவந்தோர் உரிமைகளின்படி இந்தியாவில் 18 வயது நிறைவடைந்த ஒவ்வொருவருக்கும் ஓட்டுரிமை வழங்கப்பட்டுள்ளது.)**

8. தவறான இணையைத் தேர்ந்தெடு. (நாடு - பெண்களுக்கு ஓட்டுரிமை வழங்கப்பட்ட ஆண்டு)

1. நியூஸிலாந்து - 1893

2. ஐக்கிய பேரரசு – 1917

3. அமெரிக்க ஐக்கிய நாடு – 1919

A) 1 மட்டும்

B) 1, 2

**C) 2, 3**

D) 1, 3

**(குறிப்பு: ஐக்கிய பேரரசு - 1918, அமெரிக்க ஐக்கிய நாடு – 1920)**

9. இந்தியக் குடிமக்களில் எத்தனை சதவீத பேர் தங்களது நாட்டின் மக்களாட்சியின் மீது நம்பிக்கை கொண்டுள்ளதாகப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன?

A) 59% B) 62% C) 69% **D) 79%**

**(குறிப்பு: இதன் காரணமாக உலக அளவிலான இப்பட்டியலில் இந்தியாவிற்கு முதலிடம் கிடைத்துள்ளது.)**

10. உலகிலேயே பழமையான மற்றும் நீண்ட காலமாக செயல்பட்டுவரும் நாடாளுமன்றத்தை கொண்ட மக்களாட்சி நாடு

A) கிரேக்கம்

B) சான் மரினோஸ்

**C) ஐஸ்லாந்து**

D) இங்கிலாந்து

**(குறிப்பு: ஐஸ்லாந்து**

- **காலம் - கி.பி (பொ.ஆ) 301**
- **அமைவிடம் – திங்வேளிர்)**

11. பழமையான அரசியலமைப்பு தற்போதும் நடைமுறையில் உள்ள நாடு

A) கிரேக்கம்

**B) சான் மரினோஸ்**

C) மனிதத் தீவு

D) இங்கிலாந்து

**(குறிப்பு: சான் மரினோஸ்**

- **காலம் - கி.பி. (பொ.ஆ) 301**
- **அமைவிடம் – இத்தாலி)**

12. தவறான இணையைத் தேர்ந்தெடு.(மக்களாட்சி நாடு - சிறப்புக்கூறுகள்)

A) ரோமானியப் பேரரசு - நாகரிக வளர்ச்சியின் உலகளாவிய விரிவாக்கம்.

B) மனிதத் தீவு - மன்னராட்சியின் கீழ் சுயாட்சி

**C) 1215இல் எழுதப்பட்ட மகாசாசனம் - அமெரிக்க ஐக்கிய நாடுகள்**

D) அரசியல் தத்துவத்தின் அடித்தளம் – கிரேக்கம்

**(குறிப்பு:**

**1. கிரேக்கம்**

**காலம் - கி.மு.5 ஆம் நூற்றாண்டு**

**அமைவிடம் – கிரீஸ்**

**2. இங்கிலாந்து: காலம் - கி.பி. 13 ஆம் நூற்றாண்டு)**

13. தவறான இணையைத் தேர்ந்தெடு. (மக்களாட்சி நாடு – அமைவிடம்)

1. ரோமானியப் பேரரசு - தீபகற்ப இத்தாலி

2. மனிதத் தீவு - இங்கிலாந்திற்கும் அயர்லாந்திற்கும் இடையே உள்ளது

A) 1 மட்டும் தவறு

B) 2 மட்டும் தவறு

C) இரண்டும் தவறு

**D) இரண்டும் சரி**

**(குறிப்பு:**

**ரோமானியப் பேரரசு**

**காலம் - கி.மு (பொ.ஆ.மு) 300-50**

**மனிதத் தீவு**

**காலம் - கி.பி (பொ.ஆ) 927**

**<u>அமெரிக்க ஐக்கிய நாடுகள்</u>**

**காலம் - கி.பி.1789**

**சிறப்புக்கூறுகள் - மிகப்பழமையான மக்களாட்சிகளுள் ஒன்று)**

**14.** ஆதிமனிதன் ________ பகுதியில் குடியேறி விவசாயம் செய்யத் தொடங்கினான்.

A) சமவெளி

**B) ஆற்றோரம்**

C) மலை

D) குன்று

**(குறிப்பு: ஆதிமனிதன் தொடக்கத்தில் வேட்டைச் சமூகமாகவும் உணவு சேகரிப்போராகவும் வாழ்ந்தனர்.)**

**15.** நேரடி மக்களாட்சியில் வாக்களிப்பவர் ________.

A) ஆண்கள்

B) பெண்கள்

C) பிரதிநிதிகள்

**D) வாக்காளர்கள்**

**(குறிப்பு: மக்களாட்சி அரசில், 18 வயது நிறைவுற்ற அனைத்துக் குடிமக்களுக்கும் தங்களுக்கான பிரதிநிதியைத் தேர்ந்தெடுக்கும் உரிமை வழங்கப்பட்டுள்ளது. அதேபோல் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு பிரதிநிதியும் மக்கள் நலனைக் காப்பதைக் தனது கடமையாகக் கொள்ள வேண்டும்.)**